MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on **29.09.2023** (Urgent)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | 29.09.2023 **ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை** 10.30 **மணிக்கு நடைபெறவுள்ள அவசரக்கூட்டம்** <br> **முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்** | |
| 339 | **மன்றப்பொருள் எண்**.1 <br><br> **இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவுமேலாண்மை திட்டத்தில்** 4 **சக்கர வாகனங்களை இயக்க போதிய ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால் திடக்கழிவுமேலாண்மை திட்டம் மூலம் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம்பிரிக்கும் பணி தொய்வடைகிறது. எனவே பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களை இயக்க** 4 **ஓட்டுநர்கள் வேண்டியுள்ளதால் மேற்கண்ட பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மதுரைஅவர்களின் செயல்முறை ஆணை எண்**.11664/2022**சுஇ**2 **நாள்**.13.06.2022**இன்படி** 2022-23**ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்துள்ள ஓட்டுநர்களுக்கான தினக்கூலி அடிப்படையில்** 01.10.2023 **முதல்** 31.12.2023 **வரை விலைப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.** <br><br> **அலுவலகக்குறிப்பு** <br><br> **மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 340 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.2<br><br>**மேலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் வீடுவீடாகச்சென்று திடக்கழிவுகளை பிரித்து வாங்குதல், தெருக்கூட்டுதல், வடிகால் சுத்தம் செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள** 9 **வார்டுகளில்** (6, 13, 14,15,16,17,18,19 **மற்றும்** 23) **வார்டுகளில் ஜெய்சீரடி சாய் மேன்பவர் ஏஜென்சி மதுரை நிறுவனத்தின் ஒப்பந்த காலம்** 30.09.2023 **அன்று உடன் முடிவடைகிறது. தற்போது புதிதாக ஒப்பந்ததாரரை நியமிக்கும் பணியில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்**.W.P.(MD)4090/2023 **மற்றும்** W.P.(MD).4345/2023**ல் திரு.ராமசாமி என்பவரால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நடத்துவதற்கு எதிராக தடை உத்திரவு பெறப்பட்டுள்ளது. இதுசம்பந்தமான வழக்கு மதுரை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. திடக்கழிவு மேலாண்மை பணிகள் அத்தியாவசியபணி என்பதால் மேற்படி பணிகள் பாதிப்படையாமல் தொடர்ந்து நடைபெற நீதிமன்ற தடை உத்தரவுபடி புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடைமுறைக்கு வரும்வரை அல்லது மூன்றுமாத காலமான** 01.10.2023 **முதல்** 31.12.2023 **வரை தற்காலிகமாக நீடித்துக்கொள்ள ஏற்கனவே பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரான ஜெய்சீரடிசாய் மேன்பவர் ஏஜென்சி மதுரை நிறுவனத்திற்கு தற்போதுள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்திலேயே மேற்படி நிறுவனத்தின் ஒப்புதல் பெற்று பணி நீடித்துக்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.**<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>**மன்றம் அனுமதிக்கலாம்.** | அனுமதிக்கப்பட்டது. |
| 341 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.3<br><br>**மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் தற்போது மழைக்காலம் துவங்கவிருப்பதாலும், பொதுசுகாதாரப்பிரிவிற்குத் தேவையான கிருமிநாசினி மற்றும் தளவாடச்சாமான்கள் இருப்பில் இல்லாத காரணத்தினாலும் நிரந்தர துப்புரவுப் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள்** (Safety Equipments) **தேவையான இருப்பதாலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி இந்நகர்மன்ற அனுமதிபெற்று உரிய அரசு விதிமுறைகளைப்பின்பற்றி கீழ்க்கண்ட பொருட்கள் வாங்குவதற்கும், அதற்கான செலவினம் ரூ**.10.00**இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.** | அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண். | பொருட்கள் விபரம் | எண்ணிக்கை /அளவு |
|---|---|---|
| 1 | Bleaching powder | 6 டன் |
| 2 | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | 12 டன் |
| 3 | சாக்கடை கரண்டி | 50 Nos |
| 4 | 4 பல் கொக்கி | 30 Nos |
| 5 | மண்வெட்டி | 25 |
| 6 | கடப்பாறை | 5 |
| 7 | வாங்கு அரிவாள் | 5 |
| 8 | FRB 70 லி பிளாஸ்டிக் டிரம் | 60 |
| 9 | குந்தாணி | 40 |
| 10 | வாளி இரும்பு | 25 |
| 11 | கூட்டுமார் | 100 |
| 12 | தென்னைமார் | 200 |
| 13 | மண்தள்ளும் பிரஸ் | 50 |
| 14 | கை | 200 |
| 15 | 200 லிட்டர் பேரல் | 40 |
| 16 | சவல் | 5 |
| 17 | களைகொத்து | 20 |
| 18 | லெமன் கிராஸ் ஆயில் | 100 லிட்டர் |
| 19 | கருப்பு பினாயில் | 200 லிட்டர் |
| 20 | கம்யூட்ஸ் | 38 |
| 21 | கிளவுஸ் | 38 |
| 22 | மாஸ்க் | 38 |
| 23 | ஹெல்மெட் | 38 |
| 24 | அரிவாள் | 10 |
| 25 | பிரபலிக்கும் ஆடை | 38 |

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 342 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.4<br><br>**அரசாணை எண்**.18, **நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்துறை**, **நாள்**.04.02.2019**ம் தேதிய உத்தரவின்படி**,"**தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்** 2019" **வெளியிடப்பட்டுள்ளது**. **மேற்கூறிய விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு விதி எண்**30(1) (2) **ன்படி நகராட்சி தொடர் கட்டுமான பகுதிகள்** (Continous Building Area) **மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி** (EWS) **ஆகியவற்றை கண்டறிந்து அவற்றின் சர்வே எண்களின் விபரங்களை**, **உறுப்பினர் செயலர்**, **மேலூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் வாயிலாக**, **நகர்ஊரமைப்பு ஆணையர்**, **சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று**, **நடவடிக்கை தொடர ஆணைபிறப்பிக்கப்ட்டுள்ளது**.<br><br>**அதன்படி**,**இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு தொடர் கட்டுமானப் பகுதிகள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகள் ஆகியவற்றினை உறுப்பினர் செயலர்**,**மேலூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்கள் வாயிலாக நகர் ஊரமைப்புஆணையர்**, **சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு**.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>1. **அனுமதிக்கலாம்**.<br>2. **தொடர் கட்டுமானப்பகுதிகள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகளைஉரிய வழியாக நகர் ஊரமைப்பு ஆணையர்**, **சென்னை அவர்களுக்கு அனுப்ப அனுமதிக்கலாம்**. | (1),(2)<br>அனுமதிக்கப்பட்டது.. |

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி.